**இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் - 2025**

**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன (கூட்டமைக்கும்) அதிகாரச்சட்டத்தின் 10(3) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2014 இல் 03 இலக்க இலங்கை புவிச்சரிதவியல் அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் பிரசுரிக்கப்பட்ட 2016 மார்ச் 21 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் 2 ஆம் பந்தி மற்றும் அதன் 22 ஆம் பந்தியின் உப பிரிவு 2(xi) | நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தினை நிறுவுதல், நிர்வாகம் மற்றும் பராமரித்துச் செல்லும் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை புவி சரிதவியல் நிறுவனத்தினால் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிரந்தர முகவரியுடன் அலுவலகம் நடத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இது குறித்தது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட வாறு உள்ளது. | நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கை புவிச்சரிதவியல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் 395(ஆ)(இ) பிரமாணங்கள் | வங்கி கணக்கொன்று காணப்படும் அனைத்து நிறுவனங்களாலும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பில் அதற்கடத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கும் முன்னர் வங்கி இணக்கக்கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கு தொடர்பில் 2015 ஆம் ஆண்டிலிருந்து வங்கி இணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான வங்கி இணக்கக்கூற்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்க கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 909,324 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,371,072 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 461,748 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தொடர் தொழில்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த வருமானம் குறைந்தமையே பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 60:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதம் 84:1 ஆக காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் 101:1 ஆக இருந்தமையினால், இவ் விகிதத்தில் படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது.

மீளாய்வாண்டின் விரைவு விகிதம் 59:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதம் 83:1 ஆக காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் விரைவு விகிதம் 100:1 ஆக இருந்தமையினால், இவ் விகிதத்திலிலும் படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் 219 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 1,152,500 உறுப்பினர் கட்டணம் பெற வேண்டியிருந்தபோதிலும், இக்கட்டணங்களில் 60 சதவீதமான மொத்தமாக ரூபா 690,500 தொகை வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அங்கத்தவர்களிடமிருந்து நிலுவையில் உள்ள தொகையைத் தாமதமின்றி வசூலிக்க எந்தவொரு | இக்கடமையினை புரிவாதற்காக எந்தவொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்படவில்லை, மேலும் அங்கத்தவர் பதிவேடு மற்றும் கணக்குகளைக் கணினி அமைப்பு மூலம் நிர்வகிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது | அங்கத்தவர்களிடமிருந்து நிலுவைத் தொகையை தாமதமின்றி வசூலிக்க ஒரு வினைத்திறனான அமைப்பு நிறுவப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வினைத்திறனான பொறிமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு இறுதி இருப்புக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 99,750 பெறுமதியான 133 ரீ- சேட்டுக்கள் ஆறு வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருப்பாக இருந்தது. மேலும், நிறுவனத்தின் இறுதி இருப்பு ஆண்டு இறுதியில் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட வேண்டியிருந்தபோதிலும், அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரீ- சேட்டுக்களும் 12 உத்தியோகபூர்வ முத்திரைகளும் அவ்வாறு சரிபார்த்தோ அல்லது கணக்குகளை இற்றைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்காமல் பராமரிக்கப்பட்டு வந்திருந்தன. | ஆண்டுக்கூட்டத்தில் இயக்குநர் குழுவுடன் கலந்தாலோசித்து இது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டு, எதிர்வரும் நிதியாண்டில் திருத்தங்கள் செய்யப்படும். | நிறுவனத்தின் தேவைகளின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் காலாவதியான இருப்புகளை முறையாகப் பயன்படுத்துவதற்கான ஒரு முறைமை உருவாக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகத்தினால் புவியியலாளர்களுக்காக பராமரிக்கப்பட்டு வந்த அங்கத்தவர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இக்கடமையினை புரிவதற்காக எந்தவொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்படவில்லை, மேலும் அங்கத்தவர் பதிவேடு மற்றும் கணக்குகளைக் கணினி அமைப்பு மூலம் நிர்வகிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன. | அங்கத்தவர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்த ஆண்டறிக்கை ஒவ்வொரு நிதியாண்டுக்கும் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன், சம்பந்தப்பட்ட ஆண்டு முடிவடைந்து ஆறு மாதங்களுக்குள் சுற்றுச்சூழல் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரிடமும், தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் பதிவாளரிடமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2026 ஆம் ஆண்டு மே மாத இறுதிவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. | சட்டத்தின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை அமைப்புகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 நோக்கம் மற்றும் கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| குறிப்பிட்ட காலகட்டத்தில் அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடையாளம் காணும்போது, நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் இற்றைப்படுத்தப்பட வேண்டும். இருந்த போதிலும், 2024-2028 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயற்திட்டம் இற்றைப்படுதத்ப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டமானது 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உடன்பாடு பெறப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டும் நிறுவனத் திட்டங்களைப் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 வருடாந்த செயல்திட்டம் மற்றும் இலக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்ட செயல்பாடுகள், அவற்றின் விரிவான மற்றும் தர்க்கரீதியான வரிசைமுறை, நோக்கங்களுடனான அவற்றின் இணக்கம், ஒவ்வொன்றிற்குமான நிதி மதிப்பீடுகள் மற்றும் விரிவான திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைவதற்கான குறிப்பிட்ட காலக்கெடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செயல் திட்டம் 2025 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருநத்போதிலும், அத்தகைய செயல் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தச் செயல் திட்டத்தைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். | உரிய ஆண்டிற்கான அடையக்கூடிய இலக்குகள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு ஏற்ற செயல் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட வேண்டும். |